ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2154/11 - 2019 දෙසැම්බර් මස 18 වැනි බදාදා - 2019.12.18

2154/11 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இலக்கம்: KDS/UDP/4/1/LAQ
ENTER.MORAGO.05
காணி அமைச்சின் இலக்கம்: 4-3/2/2017/CEB/201.

கம்பளை மொரகொல்ல நீர் மின் கருத்திட்டத்தின் மின் உற்பத்தி நிலைய நுழைவுப் பாதையினை நிர்மாணிப் பதற்காக காணிகளை எடுத்துக்கொள்ளல்.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணி யிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் கந்துகர இஹல கோரலே கலத எனும் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ளதும், 320229 (6) 3 ஆம் இலக்க நில உடைமை வரைபடத்தில் 25 ஆம் இலக்க காணித் துண்டில் 2.4111 ஹெக்டயார் அளவினைக் கொண்ட மற்றும் 26 ஆம் இலக்க காணித்துண்டின் 2.8859 ஹெக்டயார் அளவினைக் கொண்ட தேவிட்ட மத்தேலியஹேன என்ற பெயர்களைக் கொண்ட காணித் துண்டுகள். (காணித் துண்டுகளின் விபரப் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.)


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

நஷ்டஈடுகளுக்கான பரீட்சிப்புத் தினங்கள் மற்றும் நேரம் :

| தொடரி லக்கம் | நில உடைமை வரைபட இலக்கம் | காணித்துண்டு இலக்கம் மற்றும் காணித்துண்டுகளின் எண்ணிக்கை | | நஷ்டஈடு களுக்கான பரீட்சிப்புத் தினம் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|---|---|
| | | காணித்துண்டு இலக்கம் | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | | | |
| 01. | சி.எம். 320229 (6) 3 | 25 | 01 | 2020.01.30 | மு.ப. 10.00 | கம்பளை உடபலாத்த பிரதேச செயலகம் |
| 02. | சி.எம். 320229 (6) 3 | 26 | 01 | 2020.01.30 | மு.ப. 10.00 | கம்பளை உடபலாத்த பிரதேச செயலகம் |

மேற்குறித்த காணிக்கு உரிமை பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு உடபலாத்த பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆர். ஏ. டீ. ரீ. என். தென்னகோன்,
பிரதேச செயலாளர்,
உடபலாத்த பிரிவு,
கம்பளை.

பிரதேச செயலகம்,
உடபலாத்த,
2019, திசெம்பர் 12.

(2099/22 ஆம் இலக்க மற்றும் 2018.11.29 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையினை இரத்துச் செய்கின்றேன்.)

1 - 129

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: J/DS/2/9/4/02-2017.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு
அமைச்சின் இல.: 4-3/15/2017/VE/205.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

| | |
|---|---|
| ஆரம்ப வரைபட இல. | :- பிபியா 2948 |
| கிராமம் | :- கொழும்புத்துறை, (வட்டார இல. 08, யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்டது) |
| கிராம சேவகர் பிரிவு | :- J/61, நெடுங்குளம் |
| பிரதேச செயலாளர் பிரிவு | :- யாழ்ப்பாணம் |
| மாவட்டம் | :- யாழ்ப்பாணம் |
| மாகாணம் | :- வடக்கு மாகாணம் |
| நோக்கம் | :- கிராம விஸ்தரிப்புத் திட்டத்திற்காக |

**துண்டு இல. 01**

காணியின் பெயர்: கொழும்புத்துத்துறை தென்னந் தோட்டம் (வரி மதிப்பீட்டு இல. 551 இன் பகுதி) கொழும்புத்துறை வீதி; விபரம்: தோட்டமும் கட்டப் பட்ட கிணறும்; உரிமை கோருபவர்: குமுதா விவேகானந்தன் மற்றும் கலைமகள் லிங்கேஸ்வரன்; விஸ்தீரணம்: 1.0117 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ். சுதர்சன்,
பிரதேச செயலாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்,
2019, திசெம்பர் 13.

1 - 130